Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
| --- | --- |

வேணு : 16 டிசம்பர் 2010 கானம் : 5



நவம்பர் 13- கோபாஷ்டமி
உலகெங்குமுள்ள
சிறார்களுக்கான கோபூஜை
நிகழ்ச்சியின்பொழுது,
ஸ்ரீஸ்வாமிஜியின்
கோவர்த்தன லீலா அருளுரை

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

**Related Websites : www.namadwaar.org**
**Email:contact@namadwaar.org**

NO FAME · NO SELF INTEREST · ONLY GOD · NO NAME

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 16 | டிசம்பர் 2010 | கானம் : 5





நவம்பர் 6– ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திர தினம்
– மதுரபுரி ஜய ஹனுமான் சன்னதியில்



first inner



நவம்பர் 17 – கைசிக ஏகாதசி – விட்டலாபுரம் பாண்டுரங்கன் கோவிலில



நவம்பர் 6– ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திர தினம்
– மேலமாம்பலம் அயோத்யாமண்டபம் சுற்றி
மஹாமந்திர நகரகீர்த்தனம்

last inner



அக்டோபர் 24 - வேலூர் மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை



வெள்ளரை கிராமம் பள்ளி மாணவ மாணவியருக்கு
ஸ்ரீஸ்வாமிஜி புத்தாடை வழங்குகிறார்



நவம்பர் 8-15 சென்னை ப்ரேமிக பவனம் - உதயாஸ்தமன பாகவத
ஸப்தாஹம் - by "மாதாஜி நாமப்ரியா" -
ஸ்வாமி அபேதானந்த ஆஸ்ரமம், திருவனந்தபுரம்





ஹைதராபாத் - அக்டோபர் 28 - சாந்தீபனி குருகுல
வேதபாடசாலைக்கான பூமி பூஜையன்று - ஸ்ரீஸ்வாமிஜி உபன்யாசம்




ஹைதராபாத் - அக்டோபர் 28 - சாந்தீபனி குருகுல
வேதபாடசாலைக்கான பூமி பூஜையன்று - அத்யாபகர் ஸ்ரீராகவசர்மா
வித்யார்த்திகளுடன்

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 16 டிசம்பர் 2010 கானம் : 5


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 177 | 03 | குருவை நாமாக தேடக்கூடாது! | 13 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 07 | சாதகரின் டைரிக்குறிப்பு-6 | 05 |


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர் மங்கையார் வாள் கலிகன்றி**
**செஞ்சொலால் எடுத்த தெய்வநல்மாலை இவை கொண்டு சிக்கென தொண்டீர்**
**துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லிலும் நன்றாம்**
**நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு – நாராயணா என்னும் நாமம்**

"மரண தசையில் யமனுக்கு பயப்படாமல் நாராயண நாமத்தை சொல்லுங்கள். எப்படிப்பட்ட இன்னல்கள் வந்தாலும் நாராயண நாமம் சொல்லுங்கள். கர்ம வினையால் கஷ்டம் வருகிறது என்ற சமாதானத்தை விட கஷ்டங்கள் விலகி, உயர்வை அடைய நாராயண நாமத்தை சொல்வதே சிறந்த வழி. கஷ்டமில்லாதவர்கள் சொன்னாலும் மேலும் நன்மையை தருவது "நாராயண" கீர்த்தனமே. நமக்கு இனிமையாக இருக்கும் நாராயண நாமம் நம்முடைய வினைகளுக்கு கடுமையான நஞ்சாகிறது" என்று கலிதோஷத்தை போக்குபவரான திருமங்கைஆழ்வார், எல்லோருக்கும் தெளிவாக புரியும்படி, உயர்ந்த "நாராயண" நாம மகிமையை எடுத்துரைக்கிறார்.

(பிரபந்தம் – பெரிய திருமொழி – 1-1-10)



# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

ஒரே ஒரு தரம் என் முன்னால் வா கண்ணா!
நிச்சயமாய் மறுமுறை கேட்கவே மாட்டேன்

(ஒரே)

அனுபல்லவி

கெஞ்சுகின்றேன் நான் உன்னை கொஞ்சுகின்றேனே!
தஞ்சமடைந்தேனே! தயை செய்வாய் முரளீதரா!

(ஒரே)

சரணம்

உனக்கும் ஆணையிட தெய்வம் தானுண்டோ!
அல்லது உனை போல் வேறு தெய்வம் தானுண்டோ!
உன்னை விட்டால் எனக்கு வேறு தெய்வம் தானுண்டோ!
கண்ணா! கண்மணியே! என் கண்ணாளா!

(ஒரே)

முன் அட்டைப்படம்: நவம்பர் 14- ஆம்பூர் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையின் பொழுது குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி சார்பாக மரக்கன்று நடுதல் துவக்கி வைத்தல்

பின் அட்டைப்படம்: நவம்பர் 13- கோபாஷ்டமி உலகெங்குமுள்ள சிறார்களுக்கான கோபகுமர நிகழ்ச்சியின்பொழுது.
ஸ்ரீஸ்வாமிஜியின் கோவர்த்தன லீலா அருளுரை

## மதுரமான மஹனீயர் – 177

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

ஒரு நாள் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் என்னுடன் உரையாடிக் கொண்டிருந்தார். "மதுரபுரி ஆஸ்ரமத்தில், வருபவர்களுக்கெல்லாம் அடிக்கடி ராதையின் தரிசனம் கிடைக்கின்றது என்று கூறுகின்றார்களே. ஸமீபத்தில் கூட ஒரு



பக்தருக்கு ராதா தேவி ஆஸ்ரமத்தில் கனவில் வந்தாள்" என்றார் ஸ்ரீஸ்வாமிஜி. "நாம் மஹாமந்திரம் கீர்த்தனம் செய்து வருகின்றோம். ப்ரேமிகவரதன்தான் இங்கு ஸர்வ சான்னித்யத்துடன் இருக்கின்றான். அப்படியிருக்க, ராதையின் தரிசனம் அதிகமாக எல்லோருக்கும் கிடைப்பதன் காரணம் என்ன?" என்று நான் வினவினேன். அதற்கு ஸ்ரீஸ்வாமிஜி, ப்ரும்மாண்ட புராணத்தில் இருந்து ராதை எப்படி ஆவிர்ப்பவித்தாள் என்ற கதையை சொன்னார்.

ராதாராணியின் தந்தை விருஷபானு மஹாராஜா. அவனுக்கு குழந்தை பேறு இல்லை. அவன் சரஸ்வதியின் பேரில் தவம் இருந்தான். சரஸ்வதி அவன் முன் தோன்றி, தகுந்த



மந்திரத்தை, அவனுடைய குருவிடமிருந்து பெற்று உபாசிக்குமாறு கூறினாள். அவன் தன் குருவான மஹரிஷி கிரதுவிடம் சரஸ்வதி சொன்னபடி வேண்டினான். அவர் அவனுக்கு,

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**

என்ற மஹாமந்திரத்தைத்தான் உபதேசித்தார். அதை விருஷபானு மஹாராஜா பக்தியுடன் ஜபித்து ஹரியை உபாசனை செய்து வந்தான். சில நாட்களில் துர்க்கையான காத்யாயனி தேவி அவன் முன் தோன்றி "என்ன வரம் வேண்டும்?" என வினவினாள். தேவியை தன் முன் தோன்றுமாறு, அவன் வேண்டவே இல்லை. ஆனால் தேவி தன் முன் தோன்றியவுடன், அவளுக்கு வந்தனமும் மரியாதையும் செலுத்தி விட்டு அமைதியாக இருந்து விட்டான். அவனோ மகப்பேறு வேண்டி உபாசித்தான். அதனால் காத்யாயனிதேவியிடம், அவன் எதையும் கேட்கவில்லை.




ஆனால் தேவியோ, அவன் உள்ளக்கிடக்கையை அறிந்தவளாயிற்றே! அதனால், அவனுக்கு ஒரு பெட்டியை அளித்து, மஹாமந்திரத்தை தொடர்ந்து சொல்லி வருமாறு ஆக்ஞாபித்து சென்றாள். தேவி தோன்றிய மகிழ்ச்சியில், அவன் முன்னிலும் சிரத்தையுடன் மஹாமந்திரத்தை ஜபித்து வந்தான். சில நாட்களில், தேவி அளித்த பெட்டியிலிருந்து, ராதாதேவியே குழந்தையாக வந்தாள். இது ப்ரும்மாண்ட புராணம் உத்தர காண்டத்தில் இருக்கிறது.

அதனால்தான், நம்முடைய ஆஸ்ரமத்திலும் எல்லோருக்கும் ராதாதேவியின் தரிசனம் கிடைக்கின்றது என்றார் ஸ்ரீஸ்வாமிஜி. மஹாமந்திரம் சதா ஒலித்து வரும் நமது ஆஸ்ரமத்தில், ராதாதேவி தரிசனம் தருவது ஆச்சரியமல்லவே!

## ஒரு சாதகரின் டைரிக்குறிப்பு - 6

ஒரு ஸமயம், கோவையிலிருந்து என்னை பார்ப்பதற்காக ஒருவர் வந்திருந்தார். அவர் வெகுநேரம் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவரை சுற்றி ஒரு பனி படலம் போன்று ஒரு ஒளி வட்டம் தெரிந்தது. அந்த ஒளிவட்டத்தில், அவருடைய கழுத்தின் இடது பாகத்தில் மட்டும் அந்த ஒளி வட்டம் பாதிக்கப்பட்டு கறுப்பாக இருந்தது.

எனக்கு அதற்கான காரணம் புரியவில்லை. மீண்டும் மீண்டும் பார்க்கவே அப்படியே தெரிந்தது. அந்த இடத்தில் உங்களுக்கு எதாவது காயம் அல்லது வடு இருக்கின்றதா என்று விசாரித்தேன். அவர் அது எல்லாம் ஒன்றும் இல்லை என்றார்.


எனக்கு அந்த இடம் மட்டும் வித்யாசமாக தெரிகின்றது! டாக்டரிடம் காட்டி, பரிசோதனை செய்துகொள்ள சொன்னேன். அவர்களும் பெரிய டாக்டரிடம் காண்பித்தார்கள். டாக்டரோ சிரித்துக்கொண்டே, "வியாதி வந்த பிறகு கூட வரமாட்டார்கள், நீங்கள் ஒன்றும் இல்லாமலே வந்திருக்கின்றீர்களே" என்று பரிஹாஸம் செய்து அனுப்பிவிட்டார்.

ஆறு மாதம் கழித்து. அந்த இடத்தில் ஒரு சிறிய கட்டி வந்தது. ஏதோ GLAND (சுரப்பி) வீங்கியிருக்கும் என்றார்கள். பிறகு பயாப்ஸி செய்து பார்த்ததில் கேன்ஸர்(புற்று நோய்) என்று தெரியவந்தது. அதற்கு பிறகு இரண்டு வருடங்கள் கூட அவர் வாழவில்லை.

ஸ்தூலதேகம் பாதிக்கப்படுவதற்கு முன் சூக்ஷ்மதேகத்தில் ஏதோ ஒரு பாதிப்பு ஏற்படுகின்றது என்பதை இந்த ஸம்பவத்திலிருந்து புரிந்து கொண்டேன்.

(தொடரும்)





## பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி: நாம கீர்த்தனம் ஸதா செய்து வருவதும் ஒரு தவமாகுமா?**

**பதில்:** தவம் மூன்று விதமானது ஆகும். வாக்கினால் செய்யப்படும் தவம், மனதினால் செய்யபடும் தவம், சரீரத்தினால் செய்யப்படும் தவம். கோவிலுக்கும் க்ஷேத்ரங்களுக்கும் பாத யாத்திரை செய்வது, கிரி பிரதக்ஷிணம் செய்வது, ஆலயங்களை பிரதக்ஷிணம் செய்வது, உண்ணா நோன்பு இருப்பது, தூங்காமல் கண் விழிப்பது போன்றவை உடலால் இயற்றக் கூடிய தவங்கள். ஒரே இடத்தில், ஒரு ஆசனத்தில் அமர்ந்து மனதை ஒருமுகப்படுத்துவது, மனதை அடக்குவது போன்றவை மனோமயமான தவம் ஆகும். வாக்கினால் ஸதா ஜபம் செய்வது, மந்திரங்களை ஜபிப்பது, பாராயணம் செய்வது இவைகள் எல்லாம் வாக்கினால் இயற்றக்கூடிய தவமாகும். ஸதா நாமகீர்த்தனம் செய்வதும், நிச்சயமாக தவமாகும்.



**கேள்வி: என்னுடைய நண்பன் என்னை ஒருவரிடம் வரச்சொல்லி மிகவும் கட்டாயப்படுத்துகின்றான். அவர்தான் அவனுடைய குருவாம். அவருடைய சக்திகளைப் பற்றி நிறைய கூறுகின்றான். நான் என்ன செய்யட்டும்?**

பதில்: ஒருவரிடம் மஹிமைகள் இருப்பதனால் மட்டும் நம்பி விட முடியாது. துர்தேவதைகளை உபாசனை செய்பவர்களுக்கும், சில மஹிமைகள் வரும். ஹடயோகம் பழகுபவர்களுக்கும் கூட சில

ஸித்திகள் வரும். அதனால், அவசரப்பட வேண்டாம்.

**.கேள்வி: மூன்று விதமான ப்ரபஞ்சங்கள் யாவை?**

பதில்: ஸப்தமயமான ப்ரபஞ்சம், **பா**வமயமான ப்ரபஞ்சம், ஸ்தூலமயமான ப்ரபஞ்சம்._உதாரணத்திற்கு நாம் ராம ராம என்று ஜபம் செய்து வருவதாக வைத்துக்கொள்வோம். விடாமல், கனவு, நினைவு, தூக்கம் எல்லாவற்றிலும் அதே நாமத்தை ஜபம் செய்து வர வர, நமக்கு பல அனுபவங்கள் ஏற்பட ஆரம்பிக்கும். என்ன அது? கனவில் கோதண்டபாணியான ராமருடைய தரிசனம் ஏற்படுகின்றது. நிறைய ராமர் கோவிலுக்கு சென்று, தரிசனம் செய்யக்கூடிய பாக்கியம் ஏற்படும். ராம பக்தர்களுடைய சங்கம், மேலும் மேலும் கிடைக்கும். தியானத்தில் ராமரின் காட்சி ஏற்படும். எங்கும் ராமபிரான் உருவம் தெரிவது போல், உருவெளி தோற்றம் ஏற்படும். பிறகு முடிவில், நாம் ஒருவரை ஒருவர் பார்த்து கொள்வது போல், ராமருடைய தரிசனம் ஏற்படும். முதலில் நாம் ராம நாம ஜபம் செய்து வந்ததுதான், ஸப்தமயமான பிரபஞ்சம். பிறகு ராம மயமான காட்சிகள் பலவிதத்திலும் ஏற்பட்டதுதான் "பாவ" (BHAVA) மயமான பிரபஞ்சம். நேரில் ராமருடைய தரிசனம் ஏற்பட்டதுதான் ஸ்தூலமயமான பிரபஞ்சம்.

**கேள்வி: தமிழில் ப்ரும்மஸூத்ரம், உபநிடதங்களின் நல்ல மொழிபெயர்ப்பு எது?**

பதில்: எவ்வளவோ பெரியவர்கள் மொழி பெயர்த்திருக்கின்றார்கள். அதை விட தமிழில் ரமணர் அருளி செய்துள்ள, வேதாந்த நூல்களை படிக்கலாம். த்ராவிட உபநிடதம் ஆகும்.

✧845 destinations in India /97 major countries around globe

EMS SPEEDPOST



## "HERE IS THE SOLUTION"

GOD Global Organization for Divinity

உலக அமைதி வேண்டியும், எல்லாருக்கும் புத்தாண்டில்
எல்லாவிதமான நன்மைகள் ஏற்படவும், "ஹரே ராம"
மஹாமந்திரத்தின் வைபவத்தை நிலைநிறுத்தவும்

**மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி**

**அவர்களின் முன்னிலையில்**

**மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை நடைபெற உள்ளது.**

நாள்: சனிக்கிழமை 01.1.2011 நேரம்: 6.30 PM – 8.30 PM

இடம்: அரசர் மேல்நிலைப்பள்ளி மைதானம், அரண்மனை
வளாகம், கீழ வீதி, தஞ்சாவூர்

அனைவரும் வருக! திருவருள் பெறுக!

தொடர்புக்கு: ராஜகோபாலன் 98942 41620 கணபதி சுப்ரமணியன் 94432 95721
சாவித்திரி ராமகிருஷ்ணன் 9944161539 சிவராமகிருஷ்ணன் 94436 75294

GOD Global Organization for Divinity

## மாணவ மணிகளுக்கான மஹாமந்திர கூட்டுப்ரார்த்தனை

GOD இந்தியா டிரஸ்டு சார்பாக **X** மற்றும் **XII** மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டுப்ரார்த்தனை சென்னையில் ஜனவரி 8ஆம் தேதி நடைபெறும்.

ஸ்ரீராமானுஜம் தமிழிலும் ஸ்ரீபாக்யநாதன் ஆங்கிலத்திலும் உரையாற்றுவர்.

**தேதி - ஜனவரி 8** **இடம் : காமராஜர் அரங்கம், தேனாம்பேட்டை**

நேரம் - காலை 10 லிருந்து 12வரை

தொடர்புக்கு : 23718351 contact@godindia.org



## பாகவத பழம் (9)

**இரண்டாம் பாகம்**

– ஸ்ரீஸ்வாமிஜி

பகவான் என்றவுடன் நம்மைக் காட்டிலும் சக்தியுடையவன் என்ற ஒரு கோணத்தை மட்டும்தான் எல்லோரும் பார்க்கின்றார்கள். அவன், ஞானிகளுக்கும் பிதா, அக்ஞானிகளுக்கும் பிதா. உலகத்தில் உள்ள 84லட்சவிதமான யோனிகளில் உள்ள அத்தனை ஜீவராசிகளுக்கும் பிதா.

ஒரு கவிஞன் சில பாடல்கள் எழுதிய பிறகு அவனுக்கு கற்பனை வற்றிவிடுகின்றது. ஆனால், இன்று உலகத்தில் உள்ள 1000 கோடி மக்களுக்கும் ஒருவர் மாதிரி மற்றொருவருக்கு முகம் இல்லை, குரல் இல்லை, நடை இல்லை, பழக்க வழக்கங்கள் இல்லை. மனிதர்கள் என்பதோடு மட்டுமல்லாமல், எந்த ஜீவராசிகளிலும் இல்லை. அப்படி என்றால் அவனுடைய கற்பனை வளத்தை என்னவென்று சொல்வது! கற்பனை வளமும் எவ்வளவு ரஸிகத்தன்மையோடு உள்ளது. மயிலை சும்மா படைத்திருக்கக் கூடாதா? அதற்கு அழகழகான தோகைகள், அதன் வர்ண ஜாலங்கள். அது கால்களை அசைத்து ஆடும் அழகே அழகு. குயிலின் குரலில் பஞ்சமஸ்வரத்தில் உள்ள இனிமை, மூங்கிலில் காற்றுபட்டுவிடும்பொழுது அதன் நாதத்தில் வரும் இனிமை, பறவைகளில் எவ்வளவு வர்ணங்கள்! அதோடு மட்டும் இல்லாமல் என்ன Colour Combination? வண்ணத்துப்பூச்சி இறக்கைகளில் எத்தனை, எத்தனை வண்ணங்கள்!

வேப்பங்காயில் கசப்பு, இலுப்பங்காயில் கசப்பு, புளியில் புளிப்பு, மாம்பழத்தில் மற்றொரு சுவை, தேனில் ஒரு சுவை. யாருடைய வேலை இது? இவை ஒவ்வொன்றிலும் உள்ள சுவையைப் புரிந்து கொள்ள, ஒவ்வொருவருடைய நாக்கிலும் ருசியை உணரும் சுரப்பிகள். ஒவ்வொரு மலருக்கும் ஒவ்வொரு



வாசனை, பாலைவனத்தில் இருக்கும் ஒட்டகத்திற்கு அதற்கு ஏற்றாற்போல் கால் அமைப்பு, நீர் சேர்த்து வைத்துக் கொள்ள அதன் உடலின் அமைப்பு. என்ன விந்தை! வாத்திற்கு மீன்பிடிப்பதற்கேற்றார்போல் வாயில் ஒரு வலை, இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். வற்றாத கற்பனை வளம்மிக்க ரசிகன் பகவான்.

சரி! ஒரு பெரிய Computer System Programmer ஆல்கூட ஒரு எலும்பு மண்டலத்தின் அமைப்பைப் போல் Program செய்வது இயலுமா? இதுபோல் 84 லக்ஷம் ஜீவராசிகளை Program செய்துள்ளான் பகவான். மனிதனின் உடலும், அதிலுள்ள எலும்பு, ரத்தம், சிறுநீரகம், நுரையீரல் இதற்குமேல் கல்லீரல் ஆகியவையும், இதில் தேவையில்லாததே எதுவும் இல்லை. மனது, சிந்தனை, அறிவு, எழுதி மாளுமா? இப்படி 84 லட்ச விதமான ஜீவராசிகளின் உடல் அமைப்பு! என்ன ஒரு Master Programmer அவன்! நாம் இருக்கும் பூமி மிகவும் சிறியது. சற்று நம்மைச் சுற்றிப் பார்த்தால் எவ்வளவு கோள்கள், எவ்வளவு நட்சத்திரங்கள், எல்லாம் அந்தரத்தில் எந்த Supportம் இன்றி யார் நிற்கவைத்துள்ளார்கள்? எல்லாம் சுற்றிக்கொண்டே இருக்கின்றன, தாறுமாறாக இல்லை. சரியாக ஒரு கணிதத்திற்கு உட்பட்டு இயங்குகின்றன. நினைத்தாலே நமக்கு தலையைச் சுற்றுகின்றது. எப்படி?

கடல், காற்று, நிலம், நெருப்பு எல்லாம் தேவையான விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளன. யாரால் இது நடைபெறுகிறது. இவைகளைப் பார்க்கும் பொழுது அவனை பெரிய Technician என்று சொல்லலாமா? அவைகளை செய்ததோடு மட்டும் இல்லாமல், அவைகளை சரியாக இயக்குவதாலும் Technical Director என்றும் சொல்லலாமா? இவ்வளவு ஜீவராசிகளைப் படைத்து, அவன் எந்தப் பிறவியில் எங்கு பிறந்தாலும், அவனவன் செய்த பாவ புண்ணியத்தை சரியாகக் கொண்டு சென்று அவன் தலையிலேயே கட்டுகின்றான்.

எந்த பாரபட்சமும் அற்றவன். மேலும் ஒவ்வொருவர் உடைய மனதிலும் காமம், குரோதம், பொறாமை, பசி, தாகம், பயம், அருவருப்பு, அன்பு, பாசம் என்ற பல உணர்வுகள்; இவைகளைக் கொண்டு பிரபஞ்ச லீலை. படைத்த ஜீவராசிகளைக் கொண்டு அவர்கள் மூலமாகவே இனத்தை வ்ருத்தி செய்துகொண்டு செல்லும் சாமர்த்தியம்; எல்லாவற்றிற்கும் மேலே சக்தன், அறிவாளி, நிர்வாகி, கலைஞன், பொறுப்புள்ளவன், அன்புள்ளவன், கண்டிப்பானவன், பாரபட்சமில்லாதவன், கருணையுள்ளவன். தனக்கு நிகர் இன்னொருவர் இல்லாதவன், எல்லாம் செய்பவன், எதுவும் செய்யாதவன், ஓய்வே இல்லாதவன், சாந்தஸ்வரூபி என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

> **பூமியானது, நீரில் கலந்துவிட, நீரானது பெரிய அக்னியால் வற்றிவிட, அந்த அக்னி காற்றால் விழுங்கப்பட, அந்த காற்று ஆகாயத்தில் ஒடுங்க, ஆகாயம் பகவானிடத்தில் ஒடுங்கிவிடும். ஸ ஏக: என்கின்றது உபநிஷத். ஒன்றே இருந்ததாம், ஒன்றே உள்ளதாம், ஒன்றே இருக்குமாம்.**

சரி, அவனால் நமக்கு என்ன லாபம் இருக்கின்றதாம்? அவன் சரணாகத வத்ஸலன், பக்த வத்ஸலன் என்பதே நமக்கு இங்கு விஷயம். அப்படிப்பட்ட இவனிடம் நீ சரணாகதி செய்தால், நீ வேறு அவன் வேறு என்று இல்லாமல் செய்துவிடுவான்.

சுகம்-துக்கம், அன்பு-வெறுப்பு, ஈர்ப்பு- அருவருப்பு போன்ற இரட்டைகளைக்கூட சுயநலமில்லாமல் சிந்தித்துப் பார்த்தால், ஒன்று புரியும். என்ன புரியும்? இவைகள் இல்லாவிட்டால்,



உலகநாடகம் அலுத்துவிடும். அலுக்காமல் இருக்கவேண்டும் என்றால், நவரஸமும் ஜீவனுடைய நாடகத்தில் வேண்டும். இவ்வளவையும் ஏதோ சிந்தனை செய்து, கஷ்டப்பட்டு செய்யவில்லையாம். மனத்தினால் நினைத்தாராம்; நடந்து விட்டதாம். "விஸ்வம் மானஸ ஏவ'' என்கின்றார். இந்த பிரபஞ்சத்தின் சிருஷ்டியின் அவஸ்தையில் நாம் இருப்பதால் நமக்கு பிரபஞ்சம் தெரிகின்றது. மஹாபிரளயத்தில் பிரபஞ்சம் ஒடுங்கி, பகவான் மட்டும் இருப்பாராம். அப்பொழுதும் பிரபஞ்சம் இல்லை என்று சொல்லமுடியாதாம். தூங்கும் ஒருவனுடைய உலக எண்ணங்கள் எல்லாம் எப்படி, அவனுடைய மனதில் லயம் ஆகி உள்ளதோ, அதுபோல் பிரளயத்திலும் பிரபஞ்சம் இல்லாமல் இல்லை. மஹாபுருஷனுடைய மஹாமனதில் ஒடுங்கி உள்ளது. இப்பேர்ப்பட்ட பிரபஞ்சம் எப்படி ஒடுங்கும் என்ற சந்தேகம் வரும். நம்முடைய புத்தி சக்திக்கு ஏற்றவாறு சிந்தித்துப் பார்க்கலாமே!

குளத்தில் பல நாட்கள் ஊற வைக்கப்படும் மட்டைகள் மக்கி, நீரோடு நீராகிவிடுகின்றது. சில நாட்கள் மழை இல்லாமல் இருக்கும். அதனால், அந்த நீர் வற்றிவிடுகின்றது. அதாவது காற்றில் கலந்து விடுகின்றது. அதுபோல் 79% நீரும், 21% நிலமும் கொண்ட இந்த பூமியானது ஸமுத்திரம் பொங்கிவிடுவதால் மூழ்கிவிடும். பகவான் பல ஆண்டுகள் அதை அப்படியே விட்டுவிட, பூமியானது, நீரில் கலந்துவிட, நீரானது பெரிய அக்னியால் வற்றிவிட, அந்த அக்னி காற்றால் விழுங்கப்பட, அந்த காற்று ஆகாயத்தில் ஒடுங்க, ஆகாயம் பகவானிடத்தில் ஒடுங்கிவிடும். "ஸ ஏக:" என்கின்றது உபநிஷத். ஒன்றே இருந்ததாம், ஒன்றே உள்ளதாம், ஒன்றே இருக்குமாம். "ஆகாசாத்வாயு, வாயோ அக்னி, அக்னே: ஆப:'' என்று எப்படி சிருஷ்டி வேதத்தில் சொல்லப்பட்டதோ, அது அப்படியே Reverseல் நடக்கும். அவ்வளவுதான். அப்படிப்பார்த்தால், எப்படி பகவான் இல்லாத காலம் என்ற ஒன்று இல்லையோ, அதுபோல் ஜகத்தும் இல்லாத ஒரு காலம், இருந்ததே இல்லையாம். ஜகத்

இல்லையென்றால், ஜகந்நாதன், ஜகதீஸ்வரன், ஜகத்ரக்ஷகன் என்ற அவனுடைய திவ்யநாமங்கள் எல்லாம் வியர்த்தமாகி விடும்.

பொதுவாக பகவானை "ஸ்வாமி'' என்று சொல்வது உண்டு. "ஸ்வம்" என்றால் சொத்து. சொத்துடையவன் ஸ்வாமி. "ஜகத்'' என்ற சொத்தை உடையவன்தான் ஸ்வாமி''. உலகத்தை படைப்பதால் இவனுக்கு என்ன பயன்? (கனியும்)


Madhurasmaranam

(MY GURU AS I SEE HIM) (Live)

Venue: Yogi Ramsuratkumar Bhajanasram, Sivakasi

(DVD) Live recording of Lecture by

DR.A.BHAGYANATHANJI Personal Secretary to

His Holiness Sri Sri Muralidhara Swamiji



ஸ்ரீபாக்யநாதன் அவர்கள் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் அந்தரங்க செயலாளராகவும், அணுக்கத்தொண்டராகவும், குருநாதருக்கு, பல வருடங்களாக சேவை செய்யும் ஒரு அரிய பேறு பெற்றவர். ஸ்ரீஸ்வாமிஜியின் திவ்ய சரித்திரத்தைப் பற்றியும், அவருக்கு ஏற்பட்ட பல அனுபவங்களை பற்றியும் அன்பர்களது வாழ்க்கையில், அவர் புரிந்த பல லீலைகளை பற்றியும், பல இடங்களிலும், பல நாடுகளிலும் தொடர் உரை ஆற்றி வருகின்றார்.

A New Release from

CHAITANYA MAHAPRABHU NAMABHIKSHA KENDRA

Pl contact - 91-44-24895875 for details




## குருவை நாமாக தேடக்கூடாது

குருவை நாமாக தேடக்கூடாது. நமக்கு குரு அவசியம் என்று இறைவன் நினைத்தால் குருவை அனுப்பி வைப்பார். நமக்கு குரு அவசியம் என்று எப்பொழுது நினைப்பார்? தற்செயலாக நினைப்பாரா? அப்படி இறைவன் நினைப்பதற்கு ஏதாவது காரணம் இருக்கக்கூடுமா? இந்த உலக வாழ்வை வெறுத்து அதில் சாரமில்லை என்பதை நாம் நன்றாக உணர்ந்து இறைவனை அடைய வேண்டும் என்ற ஏக்கம் ஏற்பட வேண்டும். அந்த ஏக்கத்தை நன்றாக வளர்த்து விட்டு தவிப்பாக மாற்றி வைப்பதற்கு குருவை இறைவனாக அனுப்பி வைப்பார்.

*சிலருக்கு நல்ல குரு கிடைக்கவில்லை என்பதிலிருந்தே நாம் ஒன்றை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். என்ன அது? அவர்களுக்கு குரு வேண்டும் என்று இறைவன் நினைக்கவில்லை என்பதே அது.*

சிலருக்கு நல்ல குரு கிடைக்கவில்லை என்பதிலிருந்தே நாம் ஒன்றை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். என்ன அது? அவர்களுக்கு குரு வேண்டும் என்று இறைவன் நினைக்கவில்லை என்பதே அது. வேடனாக இருந்த வால்மீகியை தடுத்து ஆட்கொண்டு, நாரதர், அவருக்கு ராம நாமத்தை உபதேசம் செய்தார். அப்பொழுது அவருக்கு, ராம ராம என்று கூட சொல்ல வரவில்லை. மரா மரா என்றுதான் சொல்ல வந்தது. அந்த தாரக நாம ஜபத்தையே தவமாக செய்து வந்தார்.



அவர் உடம்பின் மீது கரையான், புற்று கட்டி விட்டது. வால்மீகம் என்றாலே புற்று என்று பொருள். வால்மீகி என்ற பெயர் அப்படித்தான் வந்தது.

வால்மீகி தவம் கலைந்து தமஸா நதிக்கரையில் நீராடி விட்டு வருகின்றார். அப்பொழுது அங்கு கூடியிருந்த **அன்றில்** பறவைகளில் ஒன்றை ஒரு வேடவன் அடித்து விட்டான். வால்மீகிக்கு இதை காண பொறுக்கவில்லை. தவிக்கின்றார்.

யார் தவிக்கின்றார்? முன்பு இத்தகைய கொலை தொழிலையே யார் செய்து வந்தாரோ அத்தகைய வால்மீகி தவிக்கின்றார். காரணம் என்ன? ராம நாமம் அவரை மிருதுவாகவும், அன்புள்ள ஹிருதயம் கொண்டவராகவும் மாற்றி விட்டது. அந்த காட்சியை கண்டு கோபம் அடைந்த அவர் வேடனை பார்த்து, சாபம் இடுகின்றார். அந்த சாபம் ஒரு சுலோகமாக வெளிப்படுகின்றது. நம்முடைய வாக்கிலிருந்து இப்படி ஒரு சுலோகம் வந்ததே என்று அவர் வியக்கும்பொழுது நாரதர், மீண்டும் வந்து, வால்மீகியை, உலகிற்கு என்றும் வழிகாட்டக்கூடிய ராமாயணம் எழுத செய்கின்றார்.

இதிலிருந்து என்ன தெரிகின்றது? குரு சொன்ன ஜபத்தை ஏனோ தானோ என்று ஜபம் செய்தால், அது உன்னை மட்டும் கரையேற்றும். அதையே ஒரு தவமாக செய்து சித்தி அடைந்து விட்டால், குரு உன்னை கரையேற்றினது மட்டும் அல்லாமல், குரு உன்னை கொண்டு உலகத்தவரையும் கரையேறச் செய்வார்.

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

Zaah
TECHNOLOGIES

OUR SOLUTIONS

- SEARCH ENGINE OPTIMIZATION
- WEB MARKETING
- SOFTWARE DEVELOPMENT
- WEB DEVELOPMENT

M/s. Zaah Technologies India Pvt. Ltd.,
KG Marina Bay,No.75 & 77, Ground Floor,
Santhome High Road,Santhome
Chennai 600 004
Phone: +91-44-43033513


E-mail: contact@zaahindia.com



Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited






# பாலகர்களுக்கு ஒரு கதை




## சத்சங்கம் தேவை

ஆகாயத்தில் பறவைகளைப் பாருங்கள், அவைகள் கூட்டம் கூட்டமாகத்தான் பறக்கின்றன. காட்டில் மான்கள், காட்டு விலங்குகள் எல்லாம் கூட்டம் கூட்டமாகத்தான் மேய்கின்றன. நம் வீட்டில் கூட எறும்புகள் வரிசையாகத்தான் செல்கின்றன. தனியாக இல்லாமல் கூட்டமாக இருப்பதுதான், ஸர்வ ஜீவராசிகளுடைய இயல்பு. இதற்கு மனிதன் மட்டும் விதிவிலக்கா என்ன? மனிதனும், அப்படித்தான். கோவிலுக்கு போனாலும், பொழுதுபோக்குக்கு போனாலும், தனியாக போகாமல் யாருடனாவது சேர்ந்து போகவேண்டும் என்று ஆசைப்படுகின்றான். தீய விஷயங்களான சூதாட போனாலும், மது அருந்தினாலும்கூட யாருடனாவது சேர்ந்து, அதை செய்வதற்கு ஆசைப்படுகிறான். ஸங்கம் என்பது மனிதர்களாலும் தவிர்க்கமுடியாது. ஒரு மனிதன் பிறருடைய துணை இல்லாமல் வாழவே முடியாது.

உலகில் இரண்டு ஸங்கங்கள் உண்டு, ஒன்று நல்லவர்களுடைய ஸங்கம், மற்றது துஷ்டர்களுடைய ஸங்கம். நாம் நல்லவர்களுடன் சேர்ந்து இல்லாமல் இருந்தால், துஷ்டர்கள் ஸங்கம் நம்மை பிடித்துக்கொள்ள ஆரம்பித்துவிடும். அவர்களிடமிருந்து விளையாட்டாக பிடித்துக்கொள்ளும் சில தீய பழக்கங்கள் வாழ்நாள் வரை நம்முடன் வந்து, நம்முடைய வாழ்க்கையை குலைத்துவிடும். அதோடு மட்டும் அல்லாமல், நாம் செய்யும் பாவங்களின் பலனாக, அடுத்த பல பிறவிகளிலும் தொடர்ந்து அனுபவிக்க நேரிடும். அதனால் எப்பாடுபட்டாவது குழந்தையிலிருந்தே ஸத்ஸங்கத்தை பழகிக்கொள்ள வேண்டும். சான்றோர்களுடனும், தெய்வபக்தி உள்ளவர்களுடனும் கலந்து பழகவேண்டும். அவைகள் நம் மனத்தில், சிறு ப்ராயத்திலிருந்தே நல்ல விதைகளை விதைத்துவிடும்.

1995ஆம் ஆண்டு முதல் மதுரமுரளி மாதப்பத்திரிக்கையில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கருத்தாழம் மிக்க உயரிய எண்ணங்கள் இடம் பெற்று வருகின்றன. ஸ்ரீஸ்வாமிஜியின் சிந்தனையில் உதித்த இந்த மலர்களை தொகுத்து, "உதிர்ந்த மலர்கள்" என்ற புத்தக வடிவில் சைதன்யமஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா வெளியிட்டு உள்ளது.




**A New Release from**
**CHAITANYA MAHAPRABHU NAMABHIKSHA KENDRA**
**Pl contact - 91-44-24895875 for details**








*சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**அக் 24 - வேலூரில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் ஸ்ரீமதிசாரதாம்பாள்ஸ்ரீனிவாச முதலியார் திருமண மண்டபத்தில் நடந்தது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட அன்பர்கள் இதில் கலந்து கொண்டு திருவருளும் குருவருளும் பெற்றனர்.

**அக் 28- ஹைதராபாத் பாடசாலை பூமிபூஜை** - ஹைதராபாத்தில் ஸ்ரீராகவசர்மா அத்யாபகராக இருக்கும் சாந்தீபனி குருகுல வேதபாடசாலையை ஸ்ரீரவிச்சந்திரன், ஸ்ரீமதிலதாரவிச்சந்திரன் தம்பதியினர் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர். இந்த பாடசாலைக்கென ஒரு புதிய இடம் ஹைதராபாத்திலிருந்து 20கி.மீ தொலைவில் உள்ள சில்கூரில் வாங்கப்பட்டு, அதற்கான பூமி பூஜை அக்டோபர் 28 அன்று நடந்தது. இதில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள். பூமி பூஜைக்கு பிறகு மல்காஜ்கிரி பிருந்தாவன் ஹால், ஹைதராபாத்தில் சத்சங்கம் ஏற்பாடாகி இருந்தது. இங்கு மூன்று நாட்கள், தினமும் 650அன்பர்கள் முன்னிலையில் ஸ்ரீஸ்வாமிஜி சத்சங்க, சாது, நாம மஹிமை குறித்து பேசினார்கள். ஸ்ரீமதிலதாரவிச்சந்திரன் பாடசாலை பற்றிய விவரங்களை பற்றி பேசினார். அக்டோபர் 31 வரை ஸ்ரீஸ்வாமிஜி , ஹைதராபாத்தில் பல சத்சங்கங்களில் கலந்து கொண்டார்கள்.

**நவம்பர் 5, 6 மற்றும் 8 தேதிகளில்- ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திரத்தை ஒட்டி** - சென்னை **ஆழ்வார்பேட்டை நாரதகானசபாவில் நவம்பர் 5 அன்று ஸ்ரீஸ்வாமிஜியின்** கீர்த்தனங்கள் ஸ்ரீப்ரதீப்ஜானகிராமன் மற்றும் சத்சங்கத்தினரால் பாடப்பட்டது. மாலை 6.30 முதல் 9வரை இருந்த இந்த இனிய நிகழ்ச்சியில் ஸ்ரீஸ்வாமிஜியின் திவ்ய கீர்த்தனங்களில் 24கீர்த்தனங்கள் பாடப்பட்டன. முடிவில் ஸ்ரீஸ்வாமிஜி இயற்றிய ஆஞ்சநேய கீர்த்தனமும், "கலியை பலிகொள்ளும்" மஹாமந்திர கீர்த்தனமும் பாடப்பட்டது. ஆரவாரமற்ற, தெய்வீகமான சூழலில், திரளாய் சத்சங்கத்தினர் கலந்து கொண்டு ஆனந்தித்தனர்.

**நவம்பர் 6 அன்று** சென்னை மேலமாம்பலம் அயோத்யா





மண்டபத்தில் மிக விமரிசையாக கணபதி ஹோமம், சுதர்ஸன ஹோமம், மிருத்யுஞ்ஜய ஹோமம், நவக்ரஹ ஹோமம், ஆவஹந்தி ஹோமம் ஆகிய ஹோமங்கள் சேங்காலிபுரம் ப்ரும்மஸ்ரீ கண்ணன் தீக்ஷிதர் முன்னிலையில் சதுர்வேத பாராயணத்துடன் நடந்தது. மாம்பலம் "ஜனாபாய் டிரஸ்ட்" சார்பில், மாலையில் நிகழ்ச்சிகள் விமரிசையாக நடந்தது. முதலில் விஸ்வவாரகரீ பரிவாரின் அழகிய "ஹரிபாட்" அபங்க பஜனை நடை பெற்றது. பின்னர் அயோத்யா மண்டபத்தை சுற்றி நால்வீதிகளிலும் நடந்த மஹாமந்திர நகர சங்கீர்த்தனத்தில், 200 சத்சங்க அன்பர்கள் கலந்து கொண்டனர். குமாரி சுபத்ராவின் நடனமும், சத்சங்க சிறுமிகளின் நடன நிகழ்ச்சிகளும், "குரு-சந்த்சங்க-நாம மஹிமை" என்ற தலைப்பில் "கன்யா சகோதரிகளால்" பாவார்த்த அபங்க பஜனையும் மிக சிறப்பாக நடைபெற்றது. வந்திருந்த அனைவருக்கும் பிரசாதம் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளை ஸ்ரீமதிகல்பனாஸ்ரீனிவாசன், ஸ்ரீவைத்தீஸ்வரன், ஸ்ரீவினோத் ஆகியோர் மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

மதுரபுரி ஆஸ்ரமத்தில், ஜயஹனுமானுக்கு சிறப்பு அபிஷேகமும் வடைமாலையும் சாற்றப்பட்டது. பல





ஊர்களிலிருந்தும் அன்பர்கள் வந்து ஸ்ரீஸ்வாமிஜியின் தரிசனம் பெற்று சென்றனர். அனைத்து நாமத்வார் மையங்களிலும், பல ஊர்களிலும், பல அன்பர்கள் இல்லங்களிலும் அன்னதானமும், ஸ்ரீஸ்வாமிஜிக்கு மிகவும் பிடித்தமான அகண்ட மஹாமந்திர கீர்த்தனமும் நகரசங்கீர்த்தனமும் நடந்தது.



மேலும் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இந்தோனேஷியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளை சேர்ந்த பக்தர்களும் அகண்ட மஹாமந்திர கீர்த்தனமும் கலைநிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தனர். பல இடங்களில் உபன்யாசங்களும், பாகவத பாராயணமும் க்ஷேத்ரங்களில் சிறப்பு வழிபாடும் நடந்தது குறிப்பிட வேண்டிய ஒன்று. இவற்றின் முழு விவரங்களை இணையதளத்தில் பார்க்கலாம்.



நவம்பர் 8 முதல் 15 வரை திருவனந்தபுரம் ஸ்வாமி அபேதானந்தா ஆஸ்ரமத்தை சேர்ந்த மாதாஜி "நரஹரிப்ரியா" அவர்கள், சென்னை ப்ரேமிகபவனத்தில், உதயாஸ்தமன பாகவத சப்தாஹம் நிகழ்த்தினார்கள்.

**நவம்பர் 12 - அரங்கல்துருகத்தில் நடந்த ஸ்ரீகோபாலகிருஷ்ண ஸ்வாமி**

**கோவில்** கும்பாபிஷேகத்தில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

**நவம்பர் 8ல்** ஆரம்பித்து கார்த்திகை தீப தினம் (நவம்பர் 21) வரை **சென்னை ப்ரேமிகபவனத்தில்** ஸ்ரீஸ்வாமிஜி **ராமாயண உபன்யாசம்** செய்தார். தினமும் இரண்டு மணிநேரங்களுக்கும் மேலாக ஸ்ரீஸ்வாமிஜியின் உபன்யாசம் இருந்தது. சக்கரவர்த்தி திருமகனின் கதை கேட்க, தினமும் மாலை வேளைகளில் ப்ரேமிகபவனம் நிரம்பி இருந்தது.

**நவம்பர் 13 – கோபகுடீரம்** –குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி சார்பில், உலகெங்கும் சிறார்களுக்காக விளையாட்டு, ஓவியம், புராணங்கள், பாகவத சுலோகம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பெறுவதுவே கோபகுடீரம். இதன் வருடாந்திர விழா கோபாஷ்டமியன்று நடைபெறும். இவ்வருடம் ஸ்ரீஸ்வாமிஜி கோபாஷ்டமியன்று, கோபாலனின் கோவர்த்தனலீலை குறித்து உபன்யாசம் செய்தார். இது நாமத்வார் இணையதளத்தில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. (பின் அட்டைப்படம் பார்க்கவும்)

**நவம்பர் 14 ஆம்பூர் மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை –** அன்று ஆம்பூர் செல்லும் வழியில் ஸ்ரீஸ்வாமிஜி பல்லலகுப்பம் சென்று, அங்கு ராமர் கோவில் கட்டுவதற்கான ஆலோசனைகள் வழங்கி வந்தார். இதன் விவரங்கள் முன்னரே மதுரமுரளியில் வெளிவந்திருந்தது. ஒருவாரத்திற்கும் மேலாக, ஆம்பூரில் ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திரத்தை ஒட்டி, அன்னதானம் உட்பட பல நிகழ்ச்சிகள் நடந்தவாறு இருந்தன. அதன் பூர்த்தியாகத்தான் மஹாமந்திர கூட்டுபிரார்த்தனை ஆம்பூர் ஸ்ரீனிவாசபெருமாள் ஆலயத்தில் நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் நடந்த இந்த சத்சங்கத்தில் ஸ்ரீஸ்வாமிஜியின் அருளுரையைக் கேட்க சுமார்1000 அன்பர்கள் வந்திருந்தனர்.

**நவம்பர் 17 – கைசிக ஏகாதசி – விட்டலாபுரம்** – விட்டலாபுரம் பாண்டுரங்கன் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜியின் திருக்கரங்களால் ப்ரேமிகவிட்டலனுக்கு, திருமஞ்சனமும் சிறப்பு பூஜையும் செய்யப்பட்டது. வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது நிகழ்ச்சியின் எழிலை மேலும் கூட்டியது.



**நவம்பர் 22-30 – ராமாயணம் – யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில்** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களால் சிறப்பாக ராமாயண உபன்யாசம் செய்யப்பட்டது. ஏராளமான பக்தர்கள் சிரவணம் செய்து குருவருளும் திருவருளும் பெற்றனர்.

## சனாதனப் புதிர் : பகுதி – 21 விடைகள்

–ஆத்ரேயன்



1. 12ஆழ்வார்கள் 24பிரபந்தங்களில் மொத்தம் 4004 பாசுரங்களை அருளியிருக்கிறார்கள். அதிகமாக இயற்றியது திருமங்கையாழ்வார் மொத்தம் -1361.

2. மயன் - ஹேமா; சகோதரன் மாயாவி; சகோதரி மந்தோதரி; வாலியால் கொல்லப்பட்டான்.

3. பகவான் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு - விஸ்வரூபத்தை காண (பகவத்கீதை 11.8) வியாஸர் சஞ்சயனுக்கு - அரண்மனையில் இருந்தவாறே மஹாபாரதப்போரை கண்டு, திருதராஷ்டிரனுக்கு சொல்ல - பீஷ்ம பர்வா (2.9)

4. பதினொன்று பெண்கள். மூத்தவள் காந்தாரி; இவர்கள் திருதராஷ்டிரனை மணந்தார்கள்.

5. சாந்தோக்ய உபநிஷத் (5-19; 6.5.4, 6.5.1, 6.7, 7.26.2) மேலும் பகவத்கீதை - 17.7

6. பகவத்கீதை - 10.26; 15.1.3; கட உபநிஷத் 6.1; மைத்ரி உபநிஷத் 6.4; அதர்வ வேதம் 5.3; சுஸ்ருத ஸம்ஹிதை;

7. தக்ஷிணேஸ்வரத்தில் உள்ள காளியை: இது ராமகிருஷ்ண பரமஹம்ஸரால் பூஜிக்கப்பட்டது.

8. இது ரிக்வேத ஸம்ஹிதையில் இருக்கிறது. ரிஷி அகத்தியர்; தேவதை அன்னஸ்துதி; சந்தஸ் அனுஷ்டுப்;

9. வைஜெயந்தி விஷ்ணு; வனமாலி கிருஷ்ணர்.

10. அவர் கர்ப்பத்தில் இருந்தபொழுதே ப்ரும்மத்தை அறிந்தார் (ஐத்ரேய உபநிஷத் - 2.1.5)

**RAJAN, CHAKRAVARTHY & ASSOCIATES**
**Chartered Accountants**

Our firm with a standing of over 30 years in practice, for handling variety of professional assignments is looking for filling up vacancies in CA articled / audit assistants. Candidates should have completed CPT/ IPCC Group I / B.COM /B.A ( Corp ) or other commerce based degree courses and should be willing to work FULL TIME. They will get excellent opportunities to get hands on training in all aspects of professional work including : Accounting, Auditing ( Internal and Statutory ), Income tax, VAT, Service tax Bank audit, Company Secretarial, Labour laws, Share valuation and Due diligence, Management consultancy, tax planning, NGO audits, DGFT / RBI / FEMA formalities etc.,

* Our partners also conduct regular classes in the office to impart knowledge on the above subjects.

*Suitable stipend will be paid.

* Please apply in person or through phone / cell.

For Rajan, Chakravarthy & Associates
Chartered Accountants
CA R.Sridharan, Partner
Cell:- 9884242533; Phone :- 24990053 /54




## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

### ஸ்வாமி க்ருஷ்ணானந்தஜி-3

அச்சுத முனி என்பவர் அனுபூதி பெற்ற ஒரு மஹான் மற்றும் வித்வான். ஸ்வாமி கிருஷ்ணானந்தஜியின் ரஸிக ஹ்ருதயத்தையும் பாவத்தையும் பார்த்த அந்த முனி, அவரை பிருந்தாவனம் சென்று வ்ரஜத்தில் வசித்துக்கொண்டே, பஜனை செய்யுமாறு உபதேசித்தார்.

அதன்படி கிருஷ்ணானந்தஜி பிருந்தாவனத்தை அடைந்தார். அங்கே ராஸவிஹாரியினுடைய ராஸலீலை நாடகத்தைப் பார்த்து, அவர் முற்றிலும் மாறிவிட்டார். சூரியனின் ஒளியில் ஒரு தீபத்தின் ஒளி மங்கிவிடுவது போல, அவரது பிரம்மஞானம் அவரது பக்தி பெருக்கில் மங்கியது. அவருடைய ஹ்ருதயம் பாவரஸத்தால் நிரம்பியது. அப்பொழுது அவர் ஒரு விஷயத்தை நன்றாக உணர்ந்தார். இதுநாள்வரையில் அவர் தேடிக்கொண்டிருந்த மனசாந்தி, அவருக்கு ராஸவிஹாரியின் சரணங்களிலேயே கிடைக்கும் என்பதே அது!

ராஸ லீலையை பார்த்த பின்பு, அவருக்கு ஸ்ரீமத்பாகவதம் படிக்க வேண்டும் என்று பேரவா ஏற்பட்டது. நாள் முழுவதும் அவர் ராஸ லீலைகளை பார்ப்பதிலும், ஸ்ரீமத்பாகவதம் படிப்பதிலும் செலவிட்டார். எங்கெங்கு ராஸ லீலை நடந்தாலும் அங்கே அவர் சென்று விடுவார். ராஸலீலை நாடகம் முழுவதிலும் அவர் கிருஷ்ணனுக்கு, விசிறியோ சாமரமோ போட்டு கொண்டோ இருப்பார். அச்சமயம் வ்ரஜத்தில் பஜனானந்தம் உடைய பல சித்த கௌடிய மகாத்மாக்கள் இருந்தனர். அவர்களுள் பண்டித ராமகிருஷ்ணதாஸ் பாபாஜி என்பவர் முக்கியமானவர். க்ருஷ்ணானந்தஜி அவருடன் சங்கம் வைத்துக்கொண்டார். இதனால் அவருக்கு பரம கருணையான பதித பாவனரான ஸ்ரீமகாபிரபுவிடம் பக்தி மேலோங்கியது. வங்காள மொழியை கற்று

ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதம் மற்றும் சைதன்ய பாகவதம் போன்ற கிரந்தங்களை, பாராயணம் செய்ய ஆரம்பித்தார். நாளுக்கு நாள் அவருக்கு சைதன்யதேவரின் மீது, பக்தி பெருகிக்கொண்டே இருந்தது. அதனால் ஒரு கௌடிய மகாத்மாவிடமிருந்து, தீக்ஷை பெற்று மகாபிரபுவின் சரணங்களில், ஆத்மசமர்ப்பணம் செய்வதாக அவர் முடிவெடுத்தார்.

(தொடரும்)

## <u>சனாதனப் புதிர் - பகுதி - 22</u>

(விடைகள் அடுத்த இதழில்)
–ஆத்ரேயன்

1. உத்தரா– இந்த அரசி மிக முக்கியமாக கருதப்படுபவர். எப்படி?
2. பக்தி மார்க்கத்தில் ராம நாமம் மற்றும் கிருஷ்ண நாமம் பரவ காரணமாக இருந்தவர்கள் யார்?
3. ஆனந்த ராமாயணத்தில் மொத்தம் எத்தனை காண்டங்கள், ஸர்க்கங்கள், ஸ்லோகங்கள்?
4. ஆனந்த ராமாயணம் 6வது காண்டப்படி குசன், லவன், யூபகேது இவர்கள் மனைவி யாவர் ?
5. ராமஸஹஸ்ர நாமம், ராமர் கவசம், சீதா கவசம், ஹனுமான் கவசம் - எந்த நூலில் காணப்படுகின்றன?
6. வால்மீகி ராமாயணப்படி ராமர், லஷ்மணர், பரதன், சத்ருக்னர்களின் புதல்வர் பெயர் என்ன? எந்த தேசத்திற்கு அரசர் ஆக்கப்பட்டார்கள்?
7. திர்யக் புண்ட்ரம் என்றால் என்ன? அதன் நோக்கம் என்ன?
8. சுமந்து என்பவர் யார்?
9. ஸ்வாமி சிவானந்தாவின் பெற்றொர்கள் பெயர் என்ன? கல்லூரியில் என்ன பட்டம் படித்தார்? அவரது குருவின் பெயர் என்ன?
10. வங்காளத்தில் வைஷ்ணவம் தழைக்க முக்கியமான மூவர் யார்?



## மாலே மணிவண்ணா – 90

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

நீலமணி போன்ற மலையிலிருந்து இறங்கி வருகின்ற பொன்னும் மணியும் உடைய அருவியின் அழகோடு போட்டி போடுகின்ற தாரினை உடையவர் எம்பெருமான் என்கிறார்.

*இறுவரை இழிதரும் பொன்மணி அருவியின்*
*திறனோடு மாறுந்தார்*

"தார்" என்பது நெடுகவிடப்பட்டது. இரண்டுமுனைகளையும் இணைத்தும் குஞ்சம் இட்டால், அது வட்ட வடிவமான மாலை ஆகும். இரண்டு பக்கங்களிலும் தொங்கல் உடையதாய் விடப்படுதலின் தார் என்றாயிற்று. பல்வேறுநிறங்களை உடைய மலர்களை அடுத்து, இடைஇடையே பசுந்தழைகளை உடையதாய், அமைந்த தார் பொன்னும் மணியும் கலந்து அடித்துக்கொண்டு மேலிருந்து கீழிறங்கும் அருவியோடு போட்டி போடுகிறதாம்.



திருமுடியிலிருந்து தாரை தரிசித்து, திருவடிவரை வந்தவர், அப்படியே நிமிர்ந்து பார்க்கிறார். பறவையாகிய கருடன் அமைந்த அழகிய கருடன் கொடி தரிசனம் ஆகிறது. பீதாம்பரமும் திருமுடியும் தாரும் கருடக் கொடியும் உடைய பெருமானை தரிசனம் செய்த அளவில் அப்பெருமானது சீல குணமாகிய மென்மையும், சௌலப்ய குணமாகிய எளிமையும், நெஞ்சில் எழிலாடுகின்றன. பெருமானது கருணைதான் எவ்வளவு குளிர்ச்சியானது. தன்பால் அணைந்தாரை அகலவிடாது காக்கும்

பரங்கருணை அல்லவா அது? இப்பெருமானது கருணையை பார்த்து, விண்ணில் உள்ள சந்திரன், நாமும் இந்த குளிர்ச்சியை பெற வேண்டும் என்று நினைக்கிறதாம்.

*புள்ளுப்பொறி புனைகொடி*
*விண் அளி கொண்ட வியன்மதி அணிகொளத்*
*தண்ணளி கொண்ட அணங்கு உடை நேமி மால்"*

குளிர்ந்த கருணையால் தன்னடைந்தாரைக் காக்கும் தன்மை போல, அவர்களுக்கு துன்பம் செய்தாரை வருத்தும் சக்கரத்தையும் உடையவராக இருக்கிறாராம் திருமால். இன்ப ஆக்கத்துக்கு தண்ணளியும், துன்ப நீக்கத்துக்கு சக்கரமும், உடையவராய், "அகமும் புறமும் ஆனந்த மயமாக உள்ள திருமால்" என்று சொல்லி அறிமுகத்தை தொடரும் அழகு, நுகரும்தொறும் இன்பம் பயப்பது.

*மணி வரை ஊர்ந்த மங்குல் ஞாயிற்று*
*அணி வனப்பு அமைந்த பூந்துகில் புனைமுடி*
*இருவரை இழிதரும் பொன்மணி அருவியின்*
*நிறனோடு மாறுந்தார்ப் புள்ளுப்பொறி புனைகொடி*
*விண்ணொளி கொண்ட வியன்மதி அணிகொளத்*
*தண்ணளி கொண்ட அணங்கு உடை நேமி மால்*

மணி வரை- நீலமணி போலும். வரை - மலை. மங்குல் - இருள் - வனப்பு - அழகு. பூந்துகில் - பொன்னாடை , புனை - புனையை பெற்ற என்பதால், முடி இங்கு மகுடம் ஆயிற்று. இருவரை - பாறையாக உள்ள மலை. பொன்னும் மணியும் கொண்டு இறங்கும் அருவியை பொன்மணி அருவி என்றார். கதம்பத் தார்க்கு உவமை ஆயிற்று. மாறும் - போட்டியிடும். புள் - பறவை - இங்கு கருடக்கொடி; விண் அளி கொண்ட - ஆகாயத்திலிருந்து அழித்தலை செய்யும், வியன் - அகன்ற, அணி கொள - குளிர்ச்சியாக உன் அழகினை கொள்ளுமாறு, அணங்கு - பிறரை வருத்துதல். நேமி- சக்கரம்.

(தொடரும்)



## ***அக்ஷரமணமாலை*** (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-174)

"மோகம் தவிர்த்து உன் மோகமா வைத்து" எனும் பாடலில் பகவான் "உலகத்திடம் ஆசை வைக்காதே. பகவானிடமும் கூட ஆசையை வைக்காதே. பகவானிடம் பிரதிபலன் எதிர்பாராத அன்பு தேவை" என்கிறார். அதையே அருணாசலேஸ்வரன் தனக்கு கொடுத்தான் என்கிறார்.

"மௌனியாய் கற்போன் மலராதிருந்தான்" என்ற பாடலில் "புற அடையாளங்கள் எப்படி மனத்துறவுக்கு அடையாளம் இல்லையோ, அப்படியே வாக்கினால் மௌனம் காப்பது, எப்படி, மனோ மௌனம் ஆகும்?" எனும் கேள்வியை எழுப்புகிறார். மேலும் மனோ மௌனம் இல்லாது ஆத்மஸ்வரூபம் எப்படி விளங்கும் என்றும் கூறுகிறார்.

"எவனென் வாயின் மண்ணினை அட்டி" என்ற பாடலில் "அருணாசலேஸ்வரனிடம் தாம் பல பிரார்த்தனைகளுடன் சென்றதாகவும் அதையெல்லாம் அவன் ஒழித்து மேலும் தேவையே இல்லாத ஒரு நிலையயை தந்ததை", தம் வாயில் மண் அட்டியதாக (தமது ஆசைகளை ஒழித்து) ஹாஸ்யத்துடன் குறிப்பிடுகிறார்.

"யாருமறியாதென் மதியினை மருட்டி" எனும் பாடலில் "குருவும் தெய்வமும் செய்யும் அனுக்ரஹம் என்பது யாருக்கும் தெரியாமல் புத்தியில் நேரடியாக வேலை செய்கிறது" என்பதை அழகாக "எவர் கொளை கொண்டார்" என்கிறார். சத்சங்கத்தில் உத்தம குருநாதருடன் இருப்பவர்களுக்கு தமது மதியானது ஸத்விஷயத்தில் எப்படி தம்மையும் அறியாமல் மாறுகிறது என்பதன் அனுபவம் இதை ஒப்புகிறது.

பல பாடல்களில் ஸ்வரூப சாக்ஷாத்காரத்தை பற்றி பேசுவானேன்? என்றால், அப்படி பன்முறை பலவிதமாய் கேட்டாலும் கூட மனமானது உலகை நோக்கி செல்வதை கொஞ்சமும் குறைத்து கொள்வதில்லை. மனதில் விவேகம் இருப்பவர்களுக்கு வைராக்கியம் கிடையாது. விவேகம் இல்லாதவர்கள் அநேகர். இதுவே, உலகில் இருப்போர்களின் வாழ்க்கை. இதற்கு காரணம், பல ஜன்மங்களில் உலகை நோக்கி மனம் சென்றதுதான்.

ஸ்வாமி விவேகானந்தருக்கு மட்டுமே ராமக்ருஷ்ணர், தமது அருளை தந்தார் என்பதற்கு காரணம், விவேகானந்தர் அத்தகைய அதிகாரியாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ரமண மஹரிஷிகளிடமும் ஒருவர் வந்து இப்படி தொந்தரவு செய்கையில், மஹரிஷிகள் அழகாய், "கேட்பவர் விவேகானந்தராக இருந்தால், தாம்

ராமகிருஷ்ணர் போல் அருள் செய்ய தயாராக உள்ளதாக" குறிப்பிட்டார். மந்த அதிகாரிகளுக்கு அதிக சிரவணமும் அதிக முயற்சியும் தேவை என்பதும் இதிலிருந்து தெரிகிறது.

அடுத்ததாக "ரமணனென்றுரைத்தேன்" எனும் பாடலில் அருணாசலேஸ்வரனை நாயகனாக வைத்து பாடியிருப்பது அழகாய் அமைந்திருக்கிறது. "ராப்பகலில்லா வெறுவெளி வீட்டில்" என்ற பாட்டில் அத்வைத ஞானம் சித்தித்த ஞானிகளின் நிலையை சொல்கிறார்.

அக்ஷரமணமாலை என்பது பக்தியும் வேதாந்தமும் கலந்து கலந்து இருக்கும் ஒரு அற்புதமான பாமாலை. வேதாந்தத்தை ஒரு பாட்டில் சொன்னால், அதன் பின்னோ அதிலேயோ பக்தி கலந்து வருகிறது. "லட்சியம்" என்ற பாட்டிலும், "லாபநீயிகபர" பாட்டிலும் தம்மை அருணாசலேஸ்வரன் அருள தேர்ந்தெடுத்தான் என்பதையும் பகவானின் அவ்யாஜ கருணையையும் சொல்லி ஆனந்திக்கிறார்.

மீரா, மாணிக்கவாசகர், பத்ராசல ராமதாசர் போன்ற உத்தம பக்தர்கள் பகவான் தங்களுக்கு சோதனை கொடுத்தபொழுதும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றனர். அவர்களின் பக்தி என்பது சாமானியமானதல்ல. அப்படிப்பட்ட பக்தர்கள் எப்படி பகவானிடம் உரிமையுடன் விண்ணப்பிப்பரோ அப்படி பகவானிடம் "வரும்படி சொலிலை" என்ற பாட்டில் பிரார்த்திக்கிறார். "வாவென்றகம்புக்குன்" என்ற பாட்டில் பகவான் தன் நினைவை தந்த பின், அருளாது விடுவானெனில் ஒருவர் வாழ்வு வீண் என்பதை சொல்லி பிரார்த்திக்கிறார். திருச்சுழியில் தனியாக இருந்த தம்மை திருவண்ணாமலை எனும் தனது வீட்டிற்கு பகவான் அழைத்து வந்ததோடு மட்டுமல்லாமல், உள்ளத்திலும் தனது உயர்ந்த வீட்டை அவன் "பைய" - தந்தான் என்று "வீடு விட்டு உள" என்ற பாட்டில் அழகாக விவரிக்கிறார். (உத்தம ஸ்திதியிலிருக்கும் மஹான்களின் நிலையை அவர்களது சரீரம், முழுமையாக தாங்க சிரமப்படுகிறது என்பதை ரமண மஹரிஷிகளின் சரித்திரத்தில்,அவருக்கும் குஞ்சுஸ்வாமிகளுக்கும் இடையேயான உரையாடல்களை படித்துணர்க). " விட்டிடிற் கஷ்டமாம்" என்ற பாட்டில் உயிர் பிரியும் தருவாயில் பகவானின் நினைவு வராவிடில் துன்பமான பல பிறவிகள் வர நேரிடும் என்பதை அழகாக ரத்தின சுருக்கமாய் சொல்கிறார்.பாகவதத்தில் உள்ள ஜடபரதரின் சரித்திரம் இதை மெய்ப்படுத்துகிறது.

வெளிவிட்டேனுன் செயல்" என்ற பாட்டில் சாதகர்கள் தமக்கு



ஏற்படும் அனுபவங்களை வெளியிடலாகாது என்பதை சொல்லி, தாம் தமது ஆத்மானுபவத்தை சொன்னதால், அருணாசலேஸ்வரன் தம்மிடம் கோபமுறாது அருள வேண்டும் என்கிறார். ஒரு நூலின் ஆரம்பம், முதல், முடிவை பார்த்தால் அதில் என்ன சொல்லப்படுகின்றது என்பது தெளிவாகி விடும். ஞானசம்பந்தர் போன்ற நாயன்மார்கள் பாடியபடி, வேதத்தின் முடிவிலும், நடுவிலும், முதலிலும் பகவான் அருணாசலேஸ்வரன் இருக்கிறான் என்பதை "வேதாந்தத்தே" என்ற பாடலில் சொல்கிறார்.

(தொடரும்)

மதுரமுரளி சந்தாதாரர்கள் ஆக விரும்புகிறவர்கள்

Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/ டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875

Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| டிச 2, 17 | ஏகாதசி (17- வைகுண்ட ஏகாதசி) |
| டிச 5 2 PM | சென்னை மஹோதயா ஹால் ஆயுர்வேத முகாம் |
| டிச 5 மாலை | மாலை - கோவூர் தனலஷ்மி திருமண மண்டபம் - மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை |
| டிச 9 | வேலூர் அருகே ஆயக்குளம் பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் |
| டிச 19 | பெங்களூர் கல்கரே கிராம சுந்தர ஆஞ்சநேயர் ஜயந்தி |
| டிச 19-25 | தெய்வத்தமிழ் இசை விழா - மஹோதயாஹால் |
| ஜனவரி 1, 2011 | தஞ்சாவூரில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.